# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் • திருவள்ளுவர் ஆண்டு 2057, - ஜூன் 20, 2026

Weekly E-paper • June 20, 2026




## மௌனம் சம்மதம் இல்லை!

சுப.வீரபாண்டியன்

### இதெல்லாம் கதை அல்ல, நிஜம்!

காசு. நாகராசன்

### இது மரபு மீறல்

தலையங்கம்

### ‘ஹபீபி’ அன்பின் வழியது உயிர்நிலை

முனைவர் காந்தி பாபு

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் ● திருவள்ளுவர் ஆண்டு 2057, - ஜூன் 20, 2026 Weekly E-paper ● June 20, 2026


# மௌனம் சம்மதம் இல்லை!

**சுப.வீரபாண்டியன்**

ஒரு முரண் இப்போது எல்லா இடங்களிலும் பேசப்படுகிறது!

தமிழ்நாட்டின் இன்றைய மாண்புமிகு முதலமைச்சர் விஜய் தேர்தலுக்கு முன்னால் கூட்டங்களில் மிக ஆவேசமாகப் பேசினார்! உணர்ச்சி மிகுந்த குரலில் உரத்துப் பேசினார்!

முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு, பதவிப்பிரமாணத்தில் உறுதிமொழி ஏற்றுக்கொண்டது, பேரவைத் தலைவரை வாழ்த்தியது, ஒரு தீர்மானத்தை முன்மொழிந்தது என மரபு அடிப்படையிலான சில பேச்சுகளைத் தவிர, சட்டமன்றத்தில் முழுமையாக அவர் மௌனம் காக்கிறார்!



இந்த முரண்பாடுதான் இன்று பேசு பொருள் ஆகியிருக்கிறது!

நாட்டில் சட்டம், ஒழுங்கு சிக்கலாகி இருக்கிறது! பெண்களின் பாதுகாப்பு பெரிய கேள்விக்குறியாக மாறி இருக்கிறது! அதற்காகவே உருவாக்கப்பட்ட சிங்கப்பெண் படை குறித்த கேள்விகள் சட்டமன்றத்தில் எழுந்திருக்கின்றன! காலையில் காக்கி உடையில் பணியாற்றும் அதே பெண்கள்தான் மாலையில் சிங்கப்பெண் படையில் சீருடையை அணிந்து கொள்கிறார்கள். இது ஒரு விதமான ஏமாற்றாக இருக்கிறது என்று சட்டமன்றத்திலேயே, திமுக உறுப்பினர் ஆஸ்டின் பேசியிருக்கிறார்.

பெண்கள் பாதுகாப்பு உள்ளிட்ட சட்டம் ஒழுங்குச் சிக்கல்கள் குறித்து சட்டமன்றத்தில் வினாக்கள் எழுப்பப்பட்ட போதெல்லாம், அந்தத் துறையைத் தன் பொறுப்பில் வைத்திருக்கும் மாண்புமிகு முதல்வர் விடை ஏதும் சொல்லாத நிலையில், மற்ற அமைச்சர்கள் எழுந்து விடை சொல்கிறார்கள்!

தூய சக்தி என்று தன்னைப் பற்றிச் சொல்லிக் கொண்ட முதல்வர், ஏன் எதற்கும் விடை சொல்ல மறுக்கிறார், அல்லது அஞ்சுகிறார்? பல நேரங்களில் எல்லாவற்றிற்கும், பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் எழுந்து விடை சொல்கிறார்!

வெள்ளை அறிக்கை வெளியிட்ட நிதி அமைச்சர், தமிழ்நாட்டில் நீதிப் பற்றாக்குறை இருக்கிறது என்கிறார். பிறகுதான் நிதிப் பற்றாக்குறையைத்தான் அவர் அவ்வளவு தெளிவாகச் சொல்கிறார் என்பது புரிகிறது!

எப்போது பேச வேண்டும் என்பது முதலமைச்சருக்குத் தெரியும் என்று மிரட்டும் தொனியில் அமைச்சர் ஆதவ் அர்ஜுனார் பேசுகிறார்!

"வாயைத் திறங்க சிஎம் சார்!" என்ற பதாகையோடு எதிர்க்கட்சியினர் சட்டமன்றத்திற்குள் நுழைந்த பிறகும், நம் முதலமைச்சர் வாயைத் திறக்க மறுக்கிறார்!

இந்தப் போக்கு சட்டமன்ற மரபுகளுக்கும், ஜனநாயகத்திற்கும் ஏற்றதில்லை! இதே நிலை நீடிக்குமானால், அது தமிழ்நாட்டின் முதலமைச்சரின் குறைபாடாக மட்டுமல்லாமல், தமிழ்நாட்டு அரசியலின் குறைபாடாகவே பார்க்கப்படும்!

சில வேளைகளில், மௌனமும் ஒரு வலிமையான குரலாகப் பார்க்கப்படுவதுண்டு! ஆனால் சட்டமன்றத்தில் பொறுப்புகள் நிறைந்த முதலமைச்சர் மௌனமாகவே இருப்பது, நமக்குச் சம்மதமில்லை!

●

# இதெல்லாம் கதை அல்ல, நிஜம்!

**காசு. நாகராசன்**

தமிழ்நாடு முதலமைச்சர் நடிகர் விஜய் கடந்த சட்டமன்றத் தேர்தலுக்கு முன்பாக, தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில் பேசும்போது குழந்தைகள், சிறுமிகள், முதியோர் யாருக்குமே தமிழ்நாட்டில் பாதுகாப்பு இல்லை என்றும், பாலியல் குற்றங்கள் அதிகரித்திருக்கின்றன என்றும், இதை முன்கூட்டியே தடுக்காமல் முடிந்ததற்குப் பிறகு வழக்குகளைப் பதிவு செய்வதால் எந்தப் பயனும் இல்லை என்றும்,

தான் ஆட்சிக்கு வந்தால் அடுத்த நிமிடமே இதுபோன்ற குற்றங்களைத் தடுத்து நிறுத்துவேன் என்றும் பொதுக்கூட்ட மேடைகளில் யாரோ எழுதிக் கொடுத்த வசனங்களை ஏற்ற இறக்கத்தோடு சிறப்பாகப் பேசி நடித்துக் காட்டினார்.

கடந்த 25 ஆண்டுகளுக்கும் மேலாக திரைப்படத் துறையில் கதாநாயகனாக வலம் வந்து கொண்டிருக்கிற நடிகர் விஜய், அவருக்கு இருக்கிற பெரும் ரசிகர் கூட்டம், சினிமா கவர்ச்சி, அவருடைய நடிப்பு ஆகியவற்றை மூலதனமாகக் கொண்டு திராவிட மாடல் ஆட்சிக்கு எதிராக மிகக் கடுமையான குற்றச்சாட்டுகளையும், குறைபாடுகளையும் மக்களிடத்தில் பெரிய பிம்பமாக கட்டுவதற்கு முடிந்தது, அவரை அரசியலுக்கு இழுத்து வந்த அவரது எஜமானர்களால்.

அரசு நிர்வாகம் பற்றிய புரிதலோ, ஆட்சி அதிகாரம் பற்றிய தெளிவோ, அரசியல் குறித்த அடிப்படை அறிவோ, குறைந்தபட்சம் சமூக அக்கறையோ எதுவும் இல்லாத நடிகர் விஜய், தான் நடிக்கிற திரைப்படங்களுக்கான ஒப்பந்தப் பணத்தைக் கூட கருப்பில் கொஞ்சம், வெள்ளையில் கொஞ்சம் என்று வாங்கி சொத்துகளை குவித்துக் கொண்டவர்.

அவர் வாங்கிய ஒரு வெளிநாட்டு காருக்குக்கூட நேர்மையாக வரி கட்ட மறுத்து நீதிமன்றத்தின் கண்டனத்தைப் பெற்ற நடிகர் விஜய், எதிலும் எப்போதும் உண்மையானவராக இருப்பவர் இல்லை.

இந்தியாவின் பெருமை என்று பலரும் சொல்லிக் கொண்டிருக்கிற குடும்பம், மனைவி, குழந்தைகள் என்கிற சராசரி கட்டமைப்பில் கூட அவர் உண்மையானவராக, நேர்மையாளராக நடந்து கொள்ளவில்லை என்பதை



> “ தமிழ்நாடு இதுவரை இது போன்ற ஓர் அவலமான ஆட்சியைக் கண்டதில்லை. இதுவரை இது போன்ற ஓர் அலட்சியமான, பொறுப்பற்ற விட்டேர்த்தியான ஒரு தலைவரை, முதலமைச்சரைக் கண்டதில்லை என்கிற அசிங்கமான காலகட்டத்தை வரலாறு பதிவு செய்து கொண்டிருக்கிறது! ”

அவருடைய மனைவி சங்கீதா அவர்கள் கொடுத்திருக்கிற விவாகரத்து வழக்கும், அவருடைய குழந்தைகள் கூட அவரை சந்திக்காத அல்லது குழந்தைகளைக் கூட இவர் சந்திக்காத அவலமும் ஊரறிந்த உண்மையாகும். இவையெல்லாம் அவருடைய தனிப்பட்ட வாழ்க்கையை, ஒழுக்கத்தை, அறிவு, நாணயத்தை அளவிட்டு சொல்கின்றன.

தனி வாழ்க்கையில் ஒழுக்கமும் நேர்மையும் இல்லாத ஒருவன் பொது வாழ்க்கையில் ஒரு சமூக அரசியல் களத்தில் தலைமை தாங்குகிற போது அது பொது சமூகத்தை எந்த அளவிற்கு சீரழிக்கும் என்பதற்கு

தொடர்ச்சி அடுத்த பக்கம்...

தமிழராய் வேர் பிடி ! உலகெலாம் கிளை விரி!

கருஞ்சட்டைத் தமிழர்

## இது மரபு மீறல்

தமிழ்நாடு சட்டப்பேரவையின் 17ஆம் கூட்டத்தொடர், ஆளுநர் ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் உரையுடன் 18-06-2026 அன்று காலையில் தொடங்கியது. எப்படித் தொடங்கியது?

முதலில் தமிழ்த்தாய் வாழ்த்து பாடப்பட்டது, அவையில். அது சரி! அப்படியே இரண்டாவதாக தேசியகீதமும் அங்கே பாடப்பட்டு இருக்கிறது. இது சட்டமன்ற மரபு மீறல்.

பொதுவாக நிகழ்ச்சியின் நிறைவில் /முடிவில் தேசிய கீதம் பாடப்படுவதுதான் நாட்டின் பொதுவான மரபாகும். அரசு விழாக்கள், பள்ளிகள், பல்வேறு பொது நிகழ்ச்சிகள் முடிவடையும் போது தேசிய கீதம் பாடப்பட்டு நிகழ்ச்சி நிறைவு பெறும், இதுதான் மரபு.

கடந்தகாலங்களில் இதே நடைமுறைதான் தமிழ்நாடு சட்டமன்றத்தில் பின்பற்றப்பட்டு வந்தது.

தமிழ்நாட்டின் முதலமைச்சராக மு.க.ஸ்டாலின் இருந்தபோது, சட்டப்பேரவையில் ஆளுநர் ஆர்.என்.ரவி வற்புறுத்தியும் கூட தமிழ்த்தாய் வாழ்த்து தொடக்கத்திலும், தேசியப் பாடல் இறுதியிலும் தான் பாடப்பட்டது. இதனால் பேரவையில் இருந்து ஆளுநர் வெளியேறியும் இருக்கிறார். தமிழ்நாடு முன்னாள் முதல்வரின் துணிச்சல் மிக்க ஆற்றல் இது.

நடிகர் விஜய்யின் தவெக ஆட்சியின் பதவியேற்பு நிகழ்வின்போது, இரண்டு முறை தமிழ்த்தாய் வாழ்த்து மூன்றாம் இடத்திற்குத் தள்ளப்பட்டது.

இப்போது முதலில் தமிழ்த்தாய் வாழ்த்து பாடப்பட்டாலும், அதற்குப் பின்னால் ஒட்டி நிற்கிறது தேசிய கீதம். அதுமட்டுமல்ல, ஆளுநர் உரை முடிந்தபின்பு இரண்டாம் முறையும் தேசிய கீதம் பாடப்பட்டுள்ளது.

ஏன் இரண்டு முறை தேசிய கீதம் பாடவேண்டும்? அது ஆளுநரின் விருப்பம், ஆதிக்கம். சரி முதல்வர் விஜய் என்ன செய்கிறார்?

எப்போதும் போல ஊமையாக இருக்கிறார். சட்டமன்ற மரபைப் பேணிக்காக்கும் மனவுறுதி அற்றவராக இருக்கிறார். "அஞ்சியஞ்சி சாவார்; இவர், அஞ்சாத பொருளில்லை அவனியிலே..." பாரதி பாடுகிறார்.

செய்தியாளர்களைச் சந்திக்கக்கூட அஞ்சியோடும் இவர் படிக்கும் வீரவசன மேடைப் பேச்சால் தமிழ்நாட்டின் எதிர்காலம் கேள்விக் குறியாகத்தான் தெரிகிறது.

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்

பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்

உதவி ஆசிரியர்:
வெற்றிச்செல்வன்

வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,
தொலைபேசி: 044-2472 6408

## முன்பக்கத் தொடர்ச்சி...

கடந்த ஒரு மாத கால நடிகர் விஜயின் ரீல்ஸ் ஆட்சியே ஆகச் சிறந்த உதாரணமாக இருக்கிறது.

"விஜய் சார்! நீங்க தெறி படத்தில் ஓடி வந்து குற்றவாளியைக் கண்டுபிடித்து பாலத்துல கட்டித் தொங்க விட்ட மாதிரி எங்க ஊருக்கும் வந்து குற்றவாளிகளுக்கு நீங்க தண்டனை தரணும்" என்று அப்பாவியாகப் புலம்புகிற தாய்மார்கள் இன்றைக்குத் தமிழ்நாட்டுத் தெருக்களில் பரிதாபமாகத் திரிகிறார்கள். நடக்கிற குற்றங்களுக்கு குறைந்தபட்சம் காவல்துறை அதிகாரிகளை அழைத்துக் கூட ஓர் ஆய்வுக் கூட்டத்தை இதுவரை நடத்தவில்லை முதல்வராக இருக்கிற நடிகர் விஜய். அவரும் செய்தியாளர்கள் கூட்டத்தில் இதுகுறித்து இதுவரையும் பேசவில்லை.

அவ்வளவு ஏன் இவர் கட்சி தொடங்கி நடத்திய போதும், பொய்களைப் பேசியே வாக்குகளைப் பெற்று ஆட்சி அதிகாரத்திற்கு வந்த போதும், கடந்த ஒரு மாதத்தில் நிகழ்ந்து வருகிற மிகப்பெரும் பாலியல் போதை மற்றும் சமூக குற்றங்கள் என எதன் பொருட்டும் இதுவரை பத்திரிகையாளர்களையே சந்திக்காமல் அமைதியே உருவாக நாட்டையும் மக்களையும் பற்றிய அக்கறை சிறிதும் இன்றி அலட்சியமாகக் கடந்து செல்லுகிறார் 'க்யூட்' முதல்வர் நடிகர் விஜய் .


தமிழ்நாடு இதுவரை இது போன்ற ஓர் அவலமான ஆட்சியைக் கண்டதில்லை. இதுவரை இது போன்ற ஓர் அலட்சியமான, பொறுப்பற்ற விட்டேர்த்தியான ஒரு தலைவரை, முதலமைச்சரைக் கண்டதில்லை என்கிற அசிங்கமான காலகட்டத்தை வரலாறு பதிவு செய்து கொண்டிருக்கிறது!

இதெல்லாம் கதையல்ல நிஜம்!!

●

# ‘ஹபீபி’ அன்பின் வழியது உயிர்நிலை

முனைவர் காந்தி பாபு




திராவிட இயக்கத்தின் அடிப்படைக் கோட்பாடு, மனிதனின் பிறப்பை அல்ல, அவனது மனிதத் தன்மையை மதிப்பதே. மதம், சாதி, மொழி, இன வேறுபாடுகளைக் கடந்து சமத்துவத்தை நிலைநாட்டுவதே அதன் நோக்கம். அந்தப் பார்வையில் மீரா கதிரவனின் ஹபீபி திரைப்படம் ஒரு முக்கியமான சமூக உரையாடலை உருவாக்குகிறது.

இன்றைய இந்திய அரசியல் சூழலில், முஸ்லிம் சமூகத்தை வேறு ஒரு கண்ணோட்டத்துடன் பார்க்கும் மனநிலையை சில பாசிச சக்திகள் திட்டமிட்டு உருவாக்கிக் கொண்டிருக்கின்றன. அப்படிப்பட்ட காலத்தில், முஸ்லிம் குடும்பங்களின் அன்றாட வாழ்க்கையை இயல்பாகவும் மரியாதையுடனும் காட்சிப்படுத்தியிருப்பது கலை வடிவம் என்பதைத் தாண்டி ஒரு அரசியல் அறம். மதவாதிகளின் சூழ்ச்சியால் மனிதர்களிடமிருந்து பறிக்கப்பட்டு வரும் உண்மை முகத்தை சமூகத்திற்கு காட்டும் மாயக்கண்ணாடி என்பதை ஹபீபி உணர்த்துகிறது.

இந்தப் படத்தின் மிகப் பெரிய பலம் அதன் எளிமை. கதாபாத்திரங்கள் வீர காவிய நாயகர்களாக வரவில்லை. அவர்கள் நம்மைப் போன்ற சாதாரண மனிதர்கள். அன்பு செய்கிறார்கள், தவறு செய்கிறார்கள், பயப்படுகிறார்கள், எதிர்க்கிறார்கள், கனவு காண்கிறார்கள். இது “அவர்கள்” பற்றிய திரைப்படம் அல்ல; “நம்மில் ஒருபகுதியான மனிதர்கள்” பற்றிய திரைப்படம் என்ற உணர்வை ஏற்படுத்துகிறது. அந்த உணர்வு தான் திரைப்படத்தை நம்பகமானதாக மாற்றுகிறது.

நட்புக்கும் நல்லுறவுக்கும் விருந்தோம்பலுக்கும் இலக்கணமான தென்மாவட்ட இஸ்லாமிய மக்களின் அழகான வாழ்வியலை அப்படியே காட்சிப்படுத்தியதோடு கருத்தில் சமரசம் இல்லாமலும் அதே நேரத்தில் இயல்பாகவும் காட்சிகளை நகர்த்திய விதம் பாராட்டுக்குரியது. தமிழ் சினிமாக்களில் வேறு விதமாக சித்தரிக்கப்பட்ட ஒரு சமூகத்தின் எளிய வாழ்வை அறம் சார்ந்து அழுத்தமாகப் பதிவு செய்திருக்கிற எழுத்தாளர் அமீனுக்கும் இயக்குனர் மீரா கதிரவனுக்கும் அன்பு பாராட்டுகள்.

என்ன நடந்தாலும் யார் சொன்னாலும் தன் முன்னோர்களின் நெசவுத் தொழிலை விடாப்பிடியாகப் பற்றிக் கொண்டு இருக்கும் யூசுப், பல்வேறு கஷ்டங்களுக்கிடையேயும் தன் குடும்பத்தை நிலை நிறுத்த கல்யாணமான புதிதிலேயே தன் துணையைப் பிரிந்து வெளிநாட்டுக்குச் செல்லும் சேதுமான், கணவரைப் பிரிய மனமில்லாமல் தவிக்கும் இளம் மனைவி சாலிஹா, தன் காதலிக்காக உள்ளூரை விட்டு போக மறுக்கும் அபுதாகிர் , இப்படியாக ஒரு கூட்டுக்குடும்பம் வாழும் கண்ணாடி வாப்பா மன்சிலின் உணர்வை நம்முள் கடத்துகிறார்கள் இயக்குநரும் வசனகர்த்தாவும்.

சாலிஹா, ஒரு கூட்டுக்குடும்ப அமைப்பிற்குள் வாழும் சமகாலப் பெண்ணின் பிரதிநிதி. சமூகக் கட்டுப்பாடுகளுக்கும், குடும்பத்தின் கௌரவத்திற்கும் இடையே நசுக்கப்படும் அவளது ஆசைகளும், அவள் வெளிப்படுத்தும் மீறல்களும் மிக முக்கியமானவை. சமூகம் அவளுக்கு வகுத்துள்ள எல்லைகளுக்குள் நின்றுகொண்டே, தன் உரிமைகளுக்காகவும் உணர்வுகளுக்காகவும் அவள் நடத்தும் போராட்டம், சிறுபான்மைச் சமூகப் பெண்களின் அன்றாட வாழ்வியல் எதார்த்தத்தை மிக நுணுக்கமாகப் பேசுகிறது.

முந்தைய தலைமுறையின் மரபுகளைச் சுமந்து கொண்டு, அடுத்த தலைமுறையின் மாற்றங்களை உள்வாங்கத் துடிக்கும் நிலோபர் காட்சியளிக்கிறார். ஆணாதிக்கச் சூழலின் அழுத்தங்களை அவரும் எதிர்கொள்கிறார் என்றாலும், குடும்பப் பிணைப்பைக் காக்கும் அதே வேளையில், காதலையும் உணர்வுகளையும் புரிந்து கொள்ளும் முதிர்ச்சி அவரிடம் வெளிப்படுகிறது. இறுதிகட்ட கட்சியில் நிலோபர் “ நான் குலா சொல்லிட்டேன்” என்பது மரபார்ந்த அழுத்தங்களிலிருந்து இருந்து ஒரு பெண் தன் அனுபவங்களின் வாயிலாக எவ்வாறு பக்குவப்பட்டு விடுதலையடைகிறாள் என்பதைக் காட்டும் சமூகவியல் நகர்வு.

பர்வீன் ஆணாதிக்கக் குரல்களையும் சடங்குகளையும் எதிர்த்து நிற்கிற நவீனத்துவ பெண்ணாக மிக இயல்பாக உணர்வுகளை வெளிப்படுத்துகிறார். கல்வியும், வெளி உலகத் தொடர்பும் பெண்ணின் உலகை எவ்வளவு பரந்துபட்டதாக மாற்றுகிறது என்பதை புரியவைக்கிறது.

ஆனால், ஒரு திராவிட இயக்க கருத்தாளனின் கடமை பாராட்டுவதோடு முடிவதல்ல. சில விமர்சங்களையும் கேள்விகளையும் முன்வைக்க வேண்டியிருக்கிறது. அது தான் பெரியாரியப் பார்வையும் கூட . ஒரு சமூகத்தை மனிதநேயத்துடன் சித்தரிப்பது மட்டும் போதுமா? அந்த சமூகத்தின் பெண்கள் எதிர்கொள்ளும் ஆணாதிக்கச் சிக்கல்கள், பொருளாதார அநீதி, கல்வி வாய்ப்புகளில் உள்ள சமத்துவமின்மை போன்றவற்றை திரைப்படம் எவ்வளவு ஆழமாகத் தொட்டிருக்கிறது? காதல் சமூக மாற்றத்திற்கான கதவாக இருக்கலாம்; ஆனால் அது மட்டுமே முழுமையான விடுதலையல்ல. காதல் என்பது தனிமனித விடுதலையின் ஒரு வடிவம்தான்; ஆனால் சமூக விடுதலைக்கான அரசியலை அது எந்த அளவிற்கு பேசுகிறது என்பதும் முக்கியம். அந்த அடிப்படையில் பெண்களின் முழுமையான விடுதலை, பொருளாதார ஏற்றத்தாழ்வுகள், சமூக அமைப்புகளின் அழுத்தம் போன்றவை இன்னும் ஆழமாகப் பேசப்பட்டிருக்கலாம்.இருப்பினும், வெறுப்பை அரசியலாக்கும் காலத்தில் அன்பைப் பேசுவதும் ஒரு புரட்சிகரமான செயலே!.

நான் சிறுவயதிலிருந்தே பின்னிப்பழகி வரும் பேட்டை, மேலப்பாளையம் பகுதிகளைப் போலவே கடையநல்லூர் மாமா, மாமிகளின் மொழியும் ரசிக்க வைக்கிறது. மொத்தத்தில் மயிலிறகால் மனதை வருடியிருக்கிறார்கள் ஹபீபி படக்குழுவினர். ●

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian